Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம௵ ஆகஸ்ட்டு௴ 29௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 24

## இரண்டு வருஷ யுத்தம்: சில விவரங்கள்.

### ஐரோப்பாவில் சுதந்தரம் இழந்த நாடுகள்.

### இத்தாலியின் வீழ்ச்சி; ஜெர்மனியின் தோல்விகள்.

### பிரிட்டனின் பலம் அதிகரிக்கிறது.

1939-ம௵ செப்டெம்பர்௴ 1௳ காலை, பொழுதுவிடியுமுன், ஜெர்மனி போலந்தைத் தாக்கியது. அப்போதுதான் இந்த யுத்தம் ஆரம்பமாயிற்று. யுத்தம் ஆரம்பித்து இப்போது இரண்டு வருஷங்களாய்விட்டன. இந்த இரண்டு வருஷங்களில் பல மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஐரோப்பாவிலுள்ள நாடுகளின் எல்லைகள் அடியோடு மாறிவிட்டன. சில நாடுகள் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டன. சுதந்தர நாடுகள் அடிமைநாடுகளாய்விட்டன. சுதந்தர மக்கள் ஜெர்மனியின் அடிமை மக்களாய்விட்டார்கள். பெயர் உச்சரிக்கமுடியாத போலந்து பட்டணங்களில் தொடங்கிய சண்டை இப்போது உலக முழுவதும் பரவிவிட்டது. அதனுடைய உக்கிரம், பனிக்கட்டியால் உறைந்த ஆர்டிக் பிரதேசங்களிலும், சூரிய வெப்பத்தால் காய்ந்த ஆப்பிரிக்க பாலைவனப் பிரதேசங்களிலும் பரவியிருக்கிறது.

இந்த இரண்டு வருஷ யுத்த சரித்திரத்தின் விவரங்களைச் சற்று கவனிக்கலாம். ஜெர்மனி போலந்தைத் தாக்கியபின் யுத்தம் ஆரம்பித்தது என்று கூறினோம். ஜெர்மனி என்பது ஐரோப்பாவின் மத்தியிலிருக்கும் ஒரு நாடு. போலந்து என்பது ஜெர்மனிக்குக் கிழக்கே இருந்த நாடு. மூன்று வாரமாக இந்த யுத்தம் நடந்தது. கடைசியில், ஜெர்மனி, போலந்தைப் பிடித்துக்கொண்டது. போலந்துக்கு உதவி செய்வதாக பிரிட்டனும், பிரான்சும் ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தன. அந்த ஒப்பந்தத்தின்படி அந்த இரண்டு நாடுகளும் போலந்துக்கு உதவி செய்வதற்காக ஜெர்மனியோடு சண்டை செய்ய ஆரம்பித்தன. பிரான்சு என்பது ஜெர்மனிக்கு மேற்கேயுள்ள நாடு. பிரிட்டன் என்பது பிரான்சின் வடக்கேயுள்ள ஒரு தீவு. யுத்தத்தில் போலந்து தோற்கடிக்கப்பட்டு ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட பிறகும், பிரிட்டனும், பிரான்சும், ஜெர்மனியை எதிர்த்துச் சண்டை செய்துகொண்டு வந்தன.

1940-ம் வருஷம் ஏப்ரல் மாதம், டென்மார்க், நார்வே, ஹாலந்து, பெல்ஜியம் முதலிய நாடுகளை ஜெர்மனி தாக்கி, சில நாட்களுக்குள் கைப்பற்றிவிட்டது. இவைகளெல்லாம் ஜெர்மனியின் வடமேற்கில் உள்ள சிறு நாடுகள். இந்த நாடுகளின் மூலமாகச் சென்று, ஜூன் மாதத்தில் ஜெர்மனி பிரான்சை ஒரு பக்கமாகத் தாக்கி, ஒரு மாதத்தில் தோற்கடித்துவிட்டது.

#### ஜெர்மனியின் நோக்கம்.

ஜெர்மன் பட்டாளங்கள் பிரிட்டனுக்கு அருகில் வந்துவிட்டன. ஆனால் இரண்டுக்கும் மத்தியில் கடல் இருக்கிறது அதைக்கடந்துசெல்ல இதுவரைக்கும் ஜெர்மானியப் பட்டாளங்களால் முடியவில்லை. கடந்து செல்வதற்கு உதவி செய்வதற்காக ஜெர்மன் ஆகாய விமானப்படை, 1940-ம் வருஷம் ஆகஸ்ட்டு மாதத்திலும், செப்டம்பர் மாதத்திலும் பிரிட்டிஷ் நகரங்களைப் பலமாகத்தாக்கியது. ஆனால் இந்தத் தாக்குதலை எதிர்த்து, பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை கடுமையாகச் சண்டை செய்தது; இன்னும் சண்டை செய்துகொண்டு வருகிறது.

1940-ம் வருஷம், ஆகஸ்ட்டு மாதம், 15-ந் தேதி பிரிட்டனைக் கைப்பற்றி, பிரிட்டனின் தலைநகரமாகிய லண்டனில் இருந்து கொண்டு, ஐரோப்பாவுக்குச் சமாதான நிபந்தனைகளை நான் கூறுவேன் என்று ஜெர்மனியின் சர்வாதிகாரி, ஹிட்லர், கூறிய ஆடம்பரப்பேச்சு ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லாமல் போய்விட்டது அதே 15-ந் தேதியில் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை 180 ஜெர்மன் விமானங்களைச் சுட்டு கீழே வீழ்த்தியிருக்கிறது!

பிரான்சு தோல்வியடையும் சமயத்தில், இத்தாலி ஜெர்மனியோடு சேர்ந்துகொண்டது. இத்தாலி என்பது பிரான்சுக்குத் தென்கிழக்கில் உள்ள ஒரு நீண்ட தீபகற்பம். இத்தாலியினுடைய நோக்கம் ஜெர்மனியின் வெற்றிகளில் ஒரு பங்கு கேட்கலாம் என்பதுதான். ஆனால் 'உள்ளதும் போச்சு, நொள்ளைக் கண்ணா!' என்ற பழமொழியின்படி, இத்தாலி தனக்குச் சொந்தமாக வைத்திருந்த நாடுகளையும் இழந்துவிட்டது. ஜெர்மனியால் ஜெயிக்கப்பட்ட நாடுகளிலிருந்து பெரும்பங்கு பெறலாம் என்ற அதன் ஆசை நிறைவேறவில்லை. "பேராசை பெருநஷ்டம்" என்ற பழமொழி இத்தாலியின் விஷயத்தில் மிகவும் உண்மையான மொழியாய்விட்டது.

#### இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் அழிவு.

இதற்கு முன்பிருந்தே, ஆப்பிரிக்காவில், இத்தாலி ஒரு ஏகாதிபத்தியத்தை ஏற்படுத்தியிருந்தது. அதில் முக்கியமானவை லிபியா, அபிசீனியா என்ற இரண்டு பிரதேசங்கள். லிபியா, எகிப்துக்குமேற்கில் உள்ளது; இத்தாலிக்குத் தெற்கில் உள்ளது. இத்தாலிக்கும் லிபியாவுக்கும் மத்தியில் மத்திய தரைக் கடல் இருக்கிறது. அபிசீனியா என்பது கிழக்கு ஆப்பிரிக்காவில் ஒரு முக்கியமான பாகம். லிபியாவின் கிழக்கில் உள்ள எகிப்திலும், அபிசீனியாவுக்கு வடக்கிலும், பிரிட்டிஷ் துருப்புகள் வந்து சேர்ந்திருந்தன. அபிசீனியாவுக்குத் தெற்கிலும், மேற்கிலும் கூட, பிரிட்டிஷ் துருப்புகள் தயாராக இருந்தன.

1940-ம் வருஷம் டிசம்பர் மாதம், பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், லிபியாவைத் தாக்கின. இத்தாலியத் துருப்புகள் அவைகளைவிட எண்ணிக்கையில் அதிக பலம் பொருந்தியவை. ஆனால், எண்ணிக்கையில் குறைந்த நமது படைகள் இத்தாலியத் துருப்புகளைத் தோற்கடித்துவிட்டன. 1941-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்குள் லிபியாவில் பாதியையும், இத்தாலியத் துருப்புகளில் பெரும்பாலும், நமது துருப்புகள் கைப்பற்றிவிட்டன. அதன் பிறகு அபிசீனியா தாக்கப்பட்டது. பல மாதங்களாக சண்டை நடந்தது இத்தாலிய சிப்பாய்கள் எல்லோரும் சண்டையில் இறந்துபோனவர்கள் போக, மிகுதியானவர்கள் கைதிகளாக்கப்பட்டார்கள். இந்த வருஷம் ஜூலை மாதத்தில், அபிசீனிய யுத்தம் முடிவடைந்தது. பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும், இத்தாலியை முறியடித்து அபிசீனியாவில் வெற்றிக்கொடியை நாட்டினார்கள்.

இது இப்படியிருக்க, மத்திய ஐரோப்பாவில் வேறு சண்டை நடந்துகொண்டிருந்தது. 1940-ம௵ நவம்பர்௴ இத்தாலி, கிரீஸ் தேசத்தைத் தாக்கிற்று. கிரீஸ் என்பது இத்தாலிக்குத் தென்கிழக்கிலுள்ள ஒரு தீபகற்பம். கிரீஸ் சிறிய தேசமாயிருந்தாலும், அது இத்தாலியர்களைப் பின்வாங்கிச் செல்லும்படி துரத்தியடித்தது.

#### ஜெர்மனியும், சிறு நாடுகளும்.

இதற்கு முன், அதாவது, 1940-ம் வருஷம் முதல் சில மாதங்களில், ஜெர்மனி யுத்தம் செய்யாமல், சில நாடுகளைப் பிடித்துக்கொண்டது. ஹங்கேரி, ருமேனியா, பல்கேரியா என்ற நாடுகள் இம்மாதிரி பிடிக்கப்பட்டன. இவைகளெல்லாம், கிரீசுக்கு வடக்குப் பிர

தேசத்திலுள்ள சிறு நாடுகள். இதற்குப் பிறகு, ஐரோப்பாவுக்குத் தென் கிழக்கிலுள்ள சுதந்தர நாடுகள் கிரீசும், யூகோஸ்லாவியாவும தான். இவைகளை இந்த வருஷம எப்ரலில், ஜெர்மனி தாக்கி, சீக்கிரத்தில் தோற்கடித்துவிட்டது. எகிப்திலிருந்தும், லிபியாவிலிருந்தும், பிரிட்டிஷ் துருப்புகள் கிரீசின் உதவிக்காக அனுப்பப்பட்டன. இந்த உதவி ஒரு பயனும் அளிக்கவில்லை. அதற்கு மாருக இதனுல் ஒரு கெடுதல் ஏற்பட்டது. பிரிட்டிஷ் துருப்புகள் ஆப்பிரிக்காவில் இருந்து கிரீசுக்கு வந்ததும், பிரிட்டிஷார் கைப்பற்றிய சில இடங்களை இத்தாலியர்களும், அவர்களுடைய உதவிக்கு வந்த ஜெர்மானியர்களும் மறுபடியும் கைப்பற்றிக் கொண்டார்கள். இப்போது எகிப்துக்கும், லிபியாவுக்கும் மத்தியில் யுத்தம் நடந்துகொண்டு வருகிறது. ஜெர்மானியர்களுடைய முன்னணிப் படைக்குப் பின்னுல் உள்ள தோப்ரூக் என்ற முக்கியமான கோட்டை, பிரிட்டிஷார் கையில் தான் இருக்கிறது.

ஆப்பிரிக்காவுக்கு வடக்கிலும், ஐரோப்பாவுக்குத் தெற்கிலும், ஒரு கடல் இருக்கிறது. அதற்கு மத்திய தரைக்கடல் என்று பெயர். அந்தக் கடலில், பிரிட்டிஷ் கப்பல்களுக்கும் இத்தாலியக் கப்பல்களுக்கும் சண்டை நடந்தது. இந்தச் சண்டைகளில், இத்தாலிய கப்பற்படை பலம் ஒடுக்கப்பட்டது. மத்திய தரைக் கடலின் கிழக்குக் கரையோரத்தில் சில முஸ்லீம் நாடுகள் இருக்கின்றன. ஐரோப்பாவுக்கு அடுத்தபடி, ஆசியா கண்டம் அங்குதான் ஆரம்பிக்கிறது; ஆசியா கண்டத்தில் தான் நமது இந்தியா இருக்கிறது.

## சிரியாவிலும், இராக்கிலும், ஜெர்மன் தோல்வி.

கிழக்கு மத்திய தரைக்கடலில், வடக்கில் உள்ளது துருக்கி என்ற முஸ்லீம் நாடு. துருக்கி இது வரையிலும் இந்த சண்டையில் கலக்கவில்லை. துருக்கிக்குத் தெறகில் சிரியா இருக்கிறது. இது பிரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. அதற்குத் தெற்கில் பிரிட்டிஷார் ஆதிக்கத்திலிருக்கும் பாலஸ்தீனம இருக்கிறது. ஜெயிக்கப்பட்ட பிரெஞ்சுக்காரர்களின் உதவிகொண்டு, ஜெர்மானியர்கள் சிரியாவைத் தம் வசமாக்கிக்கொள்ள முயற்சி செய்தார்கள். ஆனுல் ஜூன் மாதம் (1941), பிரிட்டிஷ் துருப்புகளும், இந்தியத் துருப்புகளும் சிரியாவைத் தாக்கின; ஆகஸ்ட்டு மாதத்திற்குள் பிரெஞ்சுத் துருப்புகளைத் தோற்கடித்து, சிரியாவை நமது துருப்புகள பிடித்துக்கொண்டன. சிரியாவுக்குக் கிழக்கில், இராக் என்ற சுதந்தர முஸ்லீம் நாடு இருக்கிறது. 1914–18-ம் வருஷங்களில் நடந்த மகாயுத்தத்தில், இதற்கு மெசபொடேமியா என்று பெயர். ஜூன் மாதத்தில், ஜெர்மானியர்கள் இராக்கில் ஒரு உள்நாட்டுக் கலகத்தை ஏற்படுத்தி, தாங்கள் உடனே அந்த நாட்டைக் கைப்பற்றவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தார்கள். ஆனுல் இராக்கின் அரசர் உடனே பிரிட்டிஷாரைத் தனக்கு உதவிசெய்யும்படி கேட்டார். பிரிட்டிஷ் துருப்புகளும் இந்தியத் துருப்புகளும் இராக்குக்குச் சென்று, கலகக்காரர்களுடன் போர்புரிந்து அவர்களைத் தோற்கடித்துவிட்டன.

சிரியாவிலும், இராக்கிலும், தன்னுடைய ஜபம் பலிக்காமல் போகவே, ஜெர்மனி, இந்த வருஷம் ஜூன்மாதம் 22-ந் தேதி, ரஷ்யாவின்மேல் படையெடுத்தது. ரஷ்யா, போலந்துக்குக் கிழக்கில் இருக்கும் விசாலமான, மிகப் பெரிய நாடு. போலந்தை ஜெர்மனி கைப்பற்றியபின், ஜெர்மனியும் ரஷ்யாவும் சேர்ந்தாற்போல் பக்கத்தில் இருந்தன. யுத்தம் ஆரம்பிப்பதற்குமுன் ஜெர்மனி ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி ஜெர்மனி ரஷ்யாவைத் தாக்குவதில்லையென்றும், ரஷ்யா ஜெர்மனியை தாக்குவதில்லை யென்றும், இரண்டு நாடுகளும் உடன்படிக்கை செய்துகொண்டன. அந்த உடன்படிக்கையை யாதொரு காரணமுமில்லாமல் ஜெர்மனி உடைத்துவிட்டது. ஜெர்மனி ரஷ்யாவின் மேல் படையெடுத்து, முதலில் அதிவேகமாக முன்னேறிச்சென்றது. சென்ற சில வாரங்களாக அதனுடைய முன்னேற்றம் ரஷ்யப்படைகளினுல் பெரிதும் தடைப்படுத்தப்பட்டிருக்கிறது.

## ஜெர்மனியின் நஷ்டம்.

ரஷ்யாவுக்கும், ஜெர்மனிக்கும் நடக்கும் யுத்தம், வடக்கே ஆர்டிக்கடலிலிருந்து, தெற்கே கருங்கடல் வரைக்கும், சுமார் 2,000 மைல்தூரம் நீண்ட போர் முனையில் நடைபெற்றுவருகிறது. பத்து வாரங்களாக நடக்கும் இந்த யுத்தத்தில், ஜெர்மனி, தான் பிடிப்பதாகக் கூறிய முக்கிய லட்சியங்களை இதுவரையில் பிடிக்க முடியவில்லை; ரஷ்யர்களுடைய போராடும் திறமையைக் கலைக்கவும் முடியவில்லை. அதற்கு மாருக, போலிஷ் மக்களையும், ரஷ்ய மக்களையும் ஜெர்மனியின் செய்கை ஒன்று சேர்த்துவிட்டது.

ரஷ்யப் பட்டாளங்கள் ஜெர்மன் துருப்புகளுக்கு ஏராளமான நஷ்டத்தை உண்டாக்கி யிருக்கின்றன. ரஷ்ய விமானப்படை ஆயிரக்கணக்கான ஜெர்மன் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருக்கின்றது. ரஷ்யக் கடற்படை, 2 லட்சம் டன் எடையுள்ள எதிரிக்கப்பல்களை, பால்டிக் கடலிலும், கருங்கடலிலும் முழுகடித்திருக்கிறது.

அட்லாண்டிக் கடலிலும் ஒரு பெரிய யுத்தம் நடக்கிறது. ஜெர்மன் கப்பல்களும், ஆகாய விமானங்களும், பிரிட்டனுக்குச் சாமான்கள் வரும் கப்பல்களை முழுகடிப்பதற்கு முயற்சிக்கின்றன. அமெரிக்காவிலிருந்தும், ஐரோப்பாவைச்சேராத இதர வெளி நாடுகளிலிருந்தும், ஏராளமான யுத்த சாமான்கள், உணவுப்பொருள்கள் முதலியன, அட்லாண்டிக் கடல் வழியாக, பிரிட்டனுக்கு வந்துகொண்டேயிருக்கின்றன. அதை முழுவதும் தடுக்கவேண்டுமென்று ஜெர்மனி பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. ஆனுல் அதனுடைய எண்ணம் நிறைவேறவில்லை.

கடல் யுத்தத்தில் ஜெர்மனி அதிக நஷ்டமடைந்திருக்கிறது. ஜெர்மனியும், அதன் கூட்டாளியான இத்தாலியும், அநேக கப்பல்களை இழந்திருக்கின்றன. இந்த வருஷம் ஜூலை மாதம் 12-ந் தேதியிலிருந்து ஆகஸ்ட்டு 16-ந் தேதிவரையில், ஐந்து வாரங்களில், 6 லட்சத்து 16 ஆயிரம் டன் எடையுள்ள எதிரிக்கப்பல்கள் முழுகடிக்கப்பட்டன. யுத்தம் ஆரம்பித்து இது வரைக்கும், பிரிட்டனும் அதற்கு உதவி செய்யும் நேச தேச நாடுகளும், எந்த மாதத்திலும் இவ்வளவு கப்பல் நஷ்டம் அடைந்ததேயில்லை. நேச தேச நாடுகளின் மாதாந்தரக் கப்பல் நஷ்டம், எதிரிகளுடைய கப்பல் நஷ்டத்தைவிடக் குறைந்தது. இதுவரைக்கும் எதிரிகளின் மொத்த கப்பல் நஷ்டம் 40 லட்சம் டன் எடைக்கு மேற்பட்டது என்று கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது, யுத்த ஆரம்ப காலத்தில் எதிரிகளுக்கிருந்த கடற்படை பலததில் பாதிக்குமேல் அவர்கள் இழந்துவிட்டார்கள். கடலில் பயமுறுத்தி, அட்டகாசம் செய்து, தன்னுடைய காரியத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம் என்ற ஜெர்மனியின் எண்ணம் பயன் படவில்லை.

அதேமாதிரியாக, பிரிட்டன்மேல் வெடி குண்டுகளைப் போட்டு, பிரிட்டிஷ் மக்களைப் பயமுறுத்திவிடலாம் என்ற ஜெர்மனியின் எண்ணமும் நிறைவேறவில்லை. பிரிட்டனில் உள்ள தொழிற்சாலைகள் மேலும் ஜெர்மனி வெடிகுண்டுகளைப் போட்டுவருகிறது. பிரிட்டிஷ் விமானப்படை, ஜெர்மனியின் தொழிற்சாலைப் பிரதேசங்களிலும், ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகளில் உள்ள முக்கியமான லட்சியங்கள் மேலும், வெடிகுண்டுகளைப் போட்டுக்கொண்டு வருகிறது.

இப்போது, பிரிட்டன் மூன்றுவிதமான வழிகளில் தன்னுடைய கவனத்தைச் செலுத்திக்கொண்டு வருகிறது. முதலாவது, ஜெர்மனியை, கடைசியில், தகுந்தவிதமாகத் தோற்கடிப்பதற்கு வேண்டிய பலத்தை வளர்த்துக்கொண்டு வருதல்; இரண்டாவது, ஜெர்மன் பட்டாளங்கள் கிழக்குநோக்கி முன்னேறிச்செல்வதைத் தடுத்தல்; மூன்றுவது, ஜெர்மனிக்கு யுத்தசாமான்கள், உணவுப்பொருள்கள் முதலியன வெளியிலிருந்து போவதைத் தடுத்தல். இந்த மூன்று வழிகளிலும் பிரிட்டன் தன்னுடைய காரியத்தைச் சாதித்துக்கொண்டு வருகிறது.

## ஒரு புதிய போர்முனை.

ஜெர்மனியால் கைப்பற்றப்பட்ட நாடுகளையும், ஜெர்மனியையும் பிரிட்டன் தாக்கிக் கைப்பற்ற முயற்சித்தால் என்னசெய்வது என்ற எண்ணம் ஜெர்மானியர்களுக்கு உண்டாயிருக்கிறது. இதைப்பற்றி பல ஜெர்மன் பத்திரிகைகள் பத்திபத்தியாக எழுதியிருக்கின்றன ஸ்காண்டிநேவியா தீபகற்ப வடக்கில், (ஜெர்மனிக்கு வடக்கிலிருப்பது ஸ்காண்டி நேவியா) பிரிட்டன் ஒரு புதிய போர்முனை ஏற்படுத்தப்

போவதாக வதந்தி உலவுகிறது. இந்த வதந்தியைக்கேட்டு நார்வேயிலுள்ள (நார்வே, ஸ்காண்டிநேவியா தீபகற்பத்தில் ஒருபாகம்) கர்க்னெஸ் என்ற இடத்திலுள்ள ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் தங்களுடைய "ரோந்து" பார்க்கும் வேலையை இரட்டித்துக்கொண்டன என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து யுத்தநிலைமை பிரிட்டனுக்கு அனுகூலமாக இருக்கிறது என்பது நன்றாகப் புலப்படும்.

இந்த அனுகூலமான நிலைமைக்குக்காரணம், அமெரிக்கா பிரிட்டனுக்குச் செய்துவரும் பேருதவியாகும். அமெரிக்கா, யுத்த சாமான்களையும், உணவுப்பொருள்களையும், பிரிட்டனுக்கு முதலில் விலைக்குக்கொடுத்தது ; பிறகு வாடகையாகவும் கடனாகவும் கொடுத்து வருகிறது. வடக்கே ஐஸ்லாந்தில் அமெரிக்கப்படைகள் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தயாராயிருக்கின்றன. பிரிட்டனுக்கும், மத்திய கிழக்கரங்கத்திலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்கும், அமெரிக்காவிலிருந்து வரும் சாமான்கள் சரியாகச் சேருவதற்காக அவைகள் சிறந்த உதவி செய்கின்றன.

அமெரிக்க சட்டசபை, வாடகை—கடன் சட்டத்தை நிறைவேற்றி, பிரிட்டனுக்குத் தன்னுடைய ஆதரவை நடைமுறையில் காட்டியிருக்கிறது. சென்ற பல மாதங்களாக ஆயிரக் கணக்கான ஆகாய விமானங்கள் அமெரிக்க தொழிற்சாலைகளில் செய்யப்பட்டு, அட்லாண்டிக் கடலைத்தாண்டி, பிரிட்டனுக்கு அனுப்பப்பட்டன. நான்கு 'எஞ்ஜின்'களுடைய பறக்கும் கோட்டை என்று சொல்லப்படும் வெடிகுண்டு விமானங்கள் முதல், அதிவேகமாகச் சென்று போர்புரியும் 'பைடர்' விமானங்கள் வரையில், பலவிதமான விமானங்களை அமெரிக்கா, பிரிட்டனுக்கு அனுப்பி வருகிறது. நூற்றுக்கணக்கான 'டாங்கிகள்' பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் பல பாகங்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இன்னும் அநேக ஆகாய விமானங்களும், 'டாங்கி'களும், கப்பல்களும், அனுப்பப்படும்.

## சென்ற யுத்தமும், இந்த யுத்தமும்.

சென்ற 1914–18 மகா யுத்தத்தில், அமெரிக்கா, கடைசியில், போரில் ஈடுபட்டது. கனடா, பிரேசில், ஜப்பான், சீனா, ரஷ்யா இவைகளெல்லாம் யுத்தத்தில் கலந்தன. ஆசியா மைனர், வடமேற்கு ஆப்பிரிக்கா, கிழக்காப்பிரிக்கா இவைகளெல்லாம் சண்டைபோடும் பிரதேசங்களாய்விட்டன. ஒவ்வொரு கண்டமும் யுத்தத்தில் கலந்திருந்ததால், அதை உலக மகா யுத்தம் என்று கூறியது மிகவும் பொறுத்தம்தான். அது முதலில் ஐரோப்பிய யுத்தமாக ஆரம்பித்து, பிறகு மற்றக் கண்டங்களுக்கும் பரவியது ஆனால் இந்த யுத்தம், தரைச் சண்டையைப் பொறுத்த வரையில், ஐரோப்பாவில் மாத்திரம்தான் நடக்கிறது. அதற்குக் காரணம், கடலுக்கப்பால் ஜெர்மனிக்கு, குடியேற்ற நாடுகளும், யுத்த தளங்களும் இல்லாததுதான். கடல் சண்டை, வழக்கம்போல, எல்லா சமுத்திரங்களிலும் நடக்கிறது. இத்தாலி பிரவேசித்த பிறகு, ஆப்பிரிக்காவில் யுத்தம் நடக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இப்போது, ஆசியாவுக்கும், அமெரிக்காவுக்கும், யுத்தம் பரவுமானால், இதை உலக யுத்தம் என்று கூறுவது பொறுத்தமாயிருக்கும். இது நடக்கக்கூடியதா ? எப்படி நடக்கும் ?

ஜப்பான் இதை உலக யுத்தமாக்கலாம். ஜப்பான் கிழக்கே வெகு தூரத்திலுள்ள ஒரு நாடு. இண்டோ–சீனாவிலிருக்கும் ஜப்பானியத் துருப்புகள் தெற்கே சென்று தாய்லாந்தில் பிரவேசிக்கலாம். அப்படிச் செய்தால், பர்மாவுக்கும், மலேயா நாடுகளுக்கும், அபாயம் ஏற்படும். ஆகையால் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஜப்பானின் அதிக்கிரமத்தைக் கட்டாயம் எதிர்க்கும். மலேயாவிலுள்ள சிங்கப்பூர், ஏகாதிபத்தியத்தின் ஒரு முக்கிய கேந்திரஸ்தானம். ஜப்பானுக்குத் தெற்கே அஸ்திரேலியாவும், நியூஜிலாந்தும் இருக்கின்றன. சிங்கப்பூர் இவைகளின் பாதுகாப்புத் திட்டத்தில் ஒரு முக்கியமான அம்சமாகும். டச்சுக் கிழக்கிந்திய தீவுகளும் இத்த யுத்த நிலைமையில் சம்பந்தப்பட்டிருக்கின்றன. இப்போதுள்ள நிலைமையைப் பாதிப்பதற்கு, ஜப்பான் ஏதாவது செய்யுமானால், அமெரிக்கா அதற்கு விரோதமாக யுத்தத்தில் ஈடுபடும் என்பதற்குச் சந்தேகமில்லை.

## ஜப்பானுக்கு எச்சரிக்கை.

ஜப்பான் ஒருவேளை ரஷ்யாவைத் தாக்கலாம். அப்போது ரஷ்யா, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் உதவியை நாடினால், அவ்வுதவி கட்டாயம் கொடுக்கப்படும். உடனே அமெரிக்காவும் யுத்தத்தில் ஈடுபடும். பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், சமீபத்தில் பேசியபோது, ஜப்பானுக்கு எச்சரிக்கை செய்திருக்கிறார். சென்ற புதன்கிழமை, ரஷ்யாவும் ஜப்பானை எச்சரிக்கை செய்திருக்கிறதாகத் தெரிகிறது. அமெரிக்காவிலிருந்து வ்லாடிவாஸ்டோக்குக்கு பெட்ரோல் முதலிய எண்ணெய்கள் வருவதை ஜப்பான் தடுக்குமானால், அதைத் தனக்கு விரோதமான செய்கையாகக் கருதப்படும் என்று ரஷ்யா கூறியிருக்கிறது. இந்த எச்சரிக்கைகளை ஜப்பான் கவனிக்காவிட்டால், ஆசியா கண்டமும், பசிபிக் கடலும், போர் அரங்கங்களாக மாறிவிடும். இப்போது, ஐரோப்பிய யுத்தம், ஜெர்மனியின் தூண்டுகோலினாலும், ஜப்பானின் அதிக்கிரமத்தினாலும், உலக யுத்தமாக மாறும் நிலைமையில் இருக்கிறது.

## தெரிந்துகொள்ளவேண்டிய சில விஷயங்கள்.

பொதுவாக, உலக யுத்த நிலைமையைப்பற்றி, நம்முடைய நாட்டு மக்கள் சில விஷயங்களைத் தெரிந்துகொள்ளவேண்டியது அவசியம். அவ்விஷயங்களைச் சுருக்கமாக இங்கே கூறலாம். இந்த யுத்தத்தை ஜெர்மனி ஆரம்பித்தது. அதற்குக் காரணம் ஜெர்மனியின் பேராசை. உலக முழுவதையும் ஜெயித்து, தன்னுடைய ஆட்சியின்கீழ் வைத்துக்கொள்ளவேண்டுமென்பது ஜெர்மனியின் எண்ணம். இதை எதிர்த்து, பிரிட்டன் போராடிக்கொண்டு வருகிறது. பிரிட்டனுக்கு அமெரிக்கா பெரிய உதவி செய்துகொண்டு வருகிறது. ஆனால் அமெரிக்கா இதுவரையில் யுத்தத்தில் கலக்கவில்லை. அமெரிக்காவின் உதவியினால், பிரிட்டன் ஜெர்மனியின் தாக்குதலைத் தடுத்து, தன்னைப் பாதுகாத்துக்கொள்ள முடிந்தது. பிரிட்டனை ஐரோப்பாவிலும், ஆப்பிரிக்காவிலும், தோற்கடிக்க முடியாததைக்கண்டு, ஜெர்மனி யுத்தத்தை வேறிடத்தில் திருப்பிக்கொண்டது. இப்போது ஜெர்மனி ரஷ்யாவுடன் போர் புரிந்துகொண்டிருக்கிறது ; பிரிட்டனையும் தாக்கிக்கொண்டிருக்கிறது. ஒரே சமயத்தில் இரண்டு போர் அரங்கங்களில் சண்டையிடுபவர்கள் வெற்றி காண்பது கஷ்டம். ரஷ்யாவை, மற்றொரு பக்கத்தில் தாக்குவதற்கும், பிரிட்டனுடைய கவனத்தை வேறிடத்தில் திருப்புவதற்கும், ஜெர்மனி ஜப்பானைத் தூண்டிக்கொண்டிருக்கிறது. ஜப்பான் ஜெர்மனியினுடைய கூட்டாளி. ஐரோப்பாவில் இத்தாலி ஜெர்மனியினுடைய கூட்டாளி. ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான்—இந்த மூன்று நாடுகளையும் அச்சுநாடுகள் என்று குறிப்பிடுவது வழக்கம். ஜப்பான் சீனாவுடன் போர் புரிந்து வருகிறது. இப்போது, ரஷ்யாவையாவது அல்லது பிரிட்டனையாவது ஜப்பான் பகைத்துக்கொள்ளுமானால் ஜெர்மனியைப்போல் இரண்டு போர் அரங்கங்களில் சண்டை செய்யவேண்டும். இரண்டு போர் அரங்கச் சண்டையில், ஜெர்மனியும், ஜப்பானும் தோல்வியடைவது நிச்சயம். இதற்குமுன், அச்சு நாடுகளில் ஒன்றாகிய இத்தாலி பிரிட்டிஷ் துருப்புகளாலும், இந்தியத் துருப்புகளாலும் ஆப்பிரிக்காவில் முழுவதும் முறியடிக்கப்பட்டது. மிகுதியாயுள்ள இரண்டு அச்சு நாடுகளும் தோல்வியடைவதற்குப் பல காரணங்களிருக்கின்றன. பிரிட்டன் கடற்பலத்தில் தலைமை ஸ்தானம் வகித்திருக்கிற வரையில், ஜெர்மனி அதை ஜெயிக்க முடியாது. அமெரிக்கா, ஜெர்மனிக்கு விரோதமாக இருப்பது, ரஷ்யாவின் ராணுவ பலம், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளின் யுத்த முயற்சி, சுதந்தரத்தை விரும்பும் உலக மக்களின் ஆதரவு, ஜெர்மனி இதுவரை அடைந்த யுத்த நஷ்டங்கள், பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகை—இவைகளெல்லாம் நேசதேசத்தார்கள் வெற்றி பெறுவார்கள் என்பதற்குக் காரணங்கள். ஆனால் இந்த வெற்றி சீக்கிரம் கிடைக்கவேண்டுமென்றால், ஒவ்வொருவரும் தம்மாலான உதவியைத் தாராளமாக, பிரிட்டனின் யுத்த முயற்சிக்குக் கொடுக்கவேண்டியது அவசியம்.

# மிஸ்டர் சர்ச்சிலின் பிரசங்கம்.

## ரஷ்யாவுக்குப் பூரண உதவி.

### ஜப்பானுக்கு எச்சரிக்கை.

பிரிட்டிஷ் முதல் மந்திரி மிஸ்டர் வின்ஸ்டன் சர்ச்சில் சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு ஒரு 'ரேடியோ' பிரசங்கம் செய்தார். அதில், பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டைத் தான் சந்தித்துப் பேசியதைப்பற்றியும், தாங்கள் இருவரும் விடுத்திருக்கும் கூட்டறிக்கையின் அம்சங்களைப்பற்றியும் கூறினர். மிஸ்டர் சர்ச்சில் மூன்று முக்கியமான விஷயங்களைத் தன் பிரசங்கத்தில் வற்புறுத்திப்பேசினர். அவை பின் வருமாறு :—

(1) ரஷ்யாவுக்கு அமெரிக்காவும், பிரிட்டனும், பூரண உதவியளிக்கவேண்டும். இதற்கு எந்தத் தடையிருந்தாலும், அதை நீக்கவேண்டும்.

(2) யுத்தம் முடிந்தபிறகு, ஜெர்மனியின் மக்கள் தங்களுடைய உழைப்பினுலும், முயற்சியினுலும் நல்வாழ்க்கை நடத்துவதற்கு அனுமதிக்கப்படுவார்கள். ஏனென்றல், ஒரு பெரிய நாட்டு மக்கள் நல்ல நிலைமையில் இல்லாவிட்டால் அதனுல் உலகத்துக்கு எப்போதும் தீங்கு நேரும். ஆனல் ஜெர்மனி நிராயுதபாணியாக்கப்படும்.

(3) ஜப்பான் அமெரிக்காவுடன் சமாதானமான முறையில் பசிபிக் கடல் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் பிரிட்டன் அமெரிக்காவுடன் சேர்ந்து ஜப்பானுடைய அதிக்கிரமத்தை அடக்க முயற்சி செய்யும். தாய்லாந்து, சிங்கப்பூர், பிலிப்பைன் தீவுகளை ஜப்பான் பயமுறுத்திக்கொண்டிருப்பது நிறுத்தப்படவேண்டும்.

மிஸ்டர் சர்ச்சில் முதலில் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டைச் சந்தித்ததைப்பற்றிக் குறிப்பிட்டார். அவர் கூறியதாவது :—

"நமது அருமை நண்பர், அமெரிக்காவின் தலைவரைச் சந்திப்பதற்காக நான் சென்ற கப்பற் பிரயாணத்தைப்பற்றிச் சொல்லும்படி நீங்கள் விரும்புகிறீர்களென்று நினைக்கிறேன். நாங்கள் எங்கு சந்தித்தோம் என்பது ஒரு இரகசியம். அட்லாண்டிக் கடலில் ஏதோ ஒரு இடத்தில் சந்தித்தோம் என்று மாத்திரம் நான் கூறுவேன். ஸ்காத்லாந்தின் மேற்குக் கரையை ஞாபகப்படுத்தும் ஒரு விசாலமான விரிகுடாவில் நாங்கள் சந்தித்தோம். பலம் பொருந்திய ஒரு அமெரிக்க யுத்தக் கப்பல், பல சிறு கப்பல்களாலும் ஆகாய விமானங்களாலும் சூழப்பட்டு எங்களை வரவேற்றது. நாங்கள் புதிதாகச் செய்யப்பட்ட பிரிட்டிஷ் யுத்தக்கப்பல், "பிரின்ஸ் அப் வேல்ஸ்"ஸில், சில பிரிட்டிஷ் நாசகாரிகளும், கனடாவின் நாசகாரிகளும் சூழ, போய்ச் சேர்ந்தோம். பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டும், நானும் சந்தித்து மூன்று நாள் கலந்து பேசினேம். அவருடைய ராணுவத்தலைவர்களும், பிரிட்டிஷ் ராணுவத்தலைவர்களும், ஒன்று சேர்ந்து பல விஷயங்களைப்பற்றி ஆலோசனை செய்தார்கள்."

### சந்திப்பின் முக்கியம்.

இந்த சந்திப்பின் முக்கியத்தைப்பற்றிக் குறித்துவிட்டு, மிஸ்டர் சர்ச்சில் கூறியதாவது :—"நல்ல விஷயங்களுக்காகப் பாடுபடும் உலக முயற்சிகள், கெட்ட விஷயங்களுக்காகப் பாடுபடும் முயற்சிகளை அழிப்பதற்காகக் கூடியதற்கு நாங்கள் சந்தித்தது ஒரு அறிகுறி என்றல் அது தவறுகாதென்று நினைக்கிறேன். உலகில் ஆங்கிலம் பேசும் மக்களெல்லோரும், எல்லாக் கண்டங்களிலும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் மக்களின் நல் வாழ்வுக்காக, சுயநலமில்லாத முயற்சியைக் கைக்கொண்டிருப்பதை இந்த சந்திப்பு காட்டுகிறது.

"அநேக காலமாக, சுதந்தரத்துடன் வாழ்ந்து வந்த மக்களின் உரிமைகளும், கலைகளும், ஸ்தாபனங்களும், ஒரு பெரிய ராட்சதப்பதரால் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றன. செக்கியர்கள், போலந்து மக்கள், நார்வீஜியர்கள், டேனிஷ்காரர்கள், பெல்ஜியர்கள், டச்சுக்காரர்கள், கிரேக்கர்கள், குரோஷியர்கள், சர்பியர்கள், இவர்களெல்லோருடன்கூட தலை சிறந்த பிரெஞ்சு நாட்டு மக்கள் எல்லோரும் அடிமைகளாக்கப்பட்டார்கள். ஸ்வீடன், ஸ்பெயின், துருக்கி முதலிய நாடுகள் அடுத்தபடியாகத் தம்மில் எது வீழ்த்தப்படும் என்று பயந்துகொண்டிருக்கின்றன.

"ஹிட்லரின் விசாலமான பகுதியில் இப்படிப்பட்ட பிரசித்திபெற்ற நாடுகளும், மக்களும் விழுந்துவிட்டார்கள். இதெல்லாம் ஹிட்லருடைய பேராசையைத் தணிக்கவில்லை. ரஷ்யாவை எதிர்ப்பதில்லை என்று ஒப்பந்தம் செய்துவிட்டு ரஷ்யாவை, யாதொரு காரணமுமில்லாமல், சரியாக ஒன்பது வாரங்களுக்குமுன் தாக்கியதற்குக் காரணம் இந்த அடங்காப் பேராசைதான்.

### நாஸிகள் ரத்த வெள்ளம்.

"ரஷ்யாவை அழித்து, அதைத் துண்டு துண்டாகக் கிழித்துவிடவேண்டும் என்ற எண்ணத்துடன் லட்சக்கணக்கான சிப்பாய்கள் ரஷ்யாவில் தள்ளப்பட்டிருக்கிறார்கள். அங்கே அவர்கள் நாளுக்கு நாள் செய்துவரும் கோர சம்பவங்கள் நமது கண்முன் நடப்பதுபோலத் தோன்றுகிறது. கர்வமும், பேராசையும், வலிப்பு வந்ததுபோல பிடித்துக்கொண்டிருக்கும் ஹிட்லர் என்ற பெரும் பிசாசினல், ரஷ்யாவை அழிப்பதற்கு, 20 அல்லது 30 லட்சம் சிப்பாய்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். ஆர்டிக் கடலிலிருந்து கருங்கடல் வரைக்கும் இருதரப்பிலும் சேர்த்து 60 அல்லது 70 லட்சம் சிப்பாய்கள் சண்டை யிடுகிறார்கள். ஆனல் இந்தத் தடவை அவ்வளவு சுலபமாகக் காரியம் நடைபெறவில்லை. ரஷ்யப்பட்டாளங்களும், ரஷ்யக் குடியரசு மக்களும் தங்கள் நாட்டைக் காப்பதற்காக ஒன்று சேர்ந்திருக்கிறார்கள். முதல் முதலாக, ஜெர்மன் நாஸிகளுடைய ரத்தம் பயங்கரமான வெள்ளமாக ஓட ஆரம்பித்திருக்கிறது

"சுமார் 2,000 மைல் நீளமுள்ள போர்முனையில் மகத்தான யுத்தம் நடைபெற்று வருகிறது. ரஷ்யர்கள் மிகத்திறமையாகப் போர்புரிகிறார்களென்று ரஷ்யப் போர்முனைக்குச் சென்று நேரில்பார்த்த பிரிட்டிஷ் தளகர்த்தர்கள் கூறுகிறார்கள்.

"ஜெர்மானியர்கள் தாங்கள் கைப்பற்றிய இடங்களில் உள்ள ரஷ்யர்களை ஆயிரக்கணக்காகச் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள். 16 வது நூற்றாண்டில், ஐரோப்பாவை மங்கோலியர்கள் படையெடுத்து, நாட்டுமக்களை எல்லாம் இரக்கமில்லாமல் கொன்றதற்குப் பிறகு, இப்போது தான் இம்மாதிரியான சம்பவங்கள் நடைபெறுகின்றன. ஐரோப்பாவில் மாத்திரம் இந்த சம்பவம் நடைபெறவில்லை. சீனுவிலும் ஜப்பான் இதே மாதிரியாக நடந்துகொண்டு வருகிறது. சமாதானமான முறையில் ஜப்பான் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளாவிட்டால், பிரிட்டன் அமெரிக்காவுடன் தடையில்லாமல் சேர்ந்து ஜப்பானுடைய அதிக்கிரமத்தை நிறுத்தும்படி ஏற்படும்.

"நாங்கள் மாஸ்கோவில் ஒரு மகாநாடு கூட்டியிருக்கிறேம். அதில் அமெரிக்க, பிரிட்டிஷ், ரஷ்ய ராணுவ அதிகாரிகள் ஒரு திட்டம் வகுப்பார்கள். ரஷ்யாவுக்கு எவ்வளவு உதவி வேண்டுமோ, அது அமெரிக்காவினலும் பிரிட்டனலும் அளிக்கப்படும். இதற்கு யாதொரு தடையும் இல்லை."

---

# இரானில் நேசத்துருப்புகள் பிரவேசம்.

## ஜெர்மானிய சூழ்ச்சியின் வீழ்ச்சி.

சென்ற திங்கட்கிழமை, இரான் என்ற தேசத்துக்குள் ரஷ்யத் துருப்புகளும், பிரிட்டிஷ் துருப்புகளும் பிரவேசித்தன. இரானைப் பாரசீகம் என்றும் சொல்லுவார்கள். இந்தியாவில் உள்ள பலுசிஸ்தானத்துக்கு மேற்கில் உள்ளது இரான். ஏன் இந்தத் துருப்புகள் இரானில் பிரவேசித்தன ? சில மாதங்களாக, ஜெர்மானியர்கள் ஏராளமாக இரானுக்கு வந்து முக்கியமான அந்தஸ்துகளில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இரானையும் அடிமை நாடாக்கிவிடவேண்டுமென்பது ஜெர்மனியின் நோக்கம். இரானுக்கு மேலும் மேலும் ஜெர்மானியர்கள் வந்துகொண்டேயிருக்கிறார்கள். பல இடங்களில்

## தீயணைக்கும் பிரிட்டிஷ் பெண் படை.



பிரிட்டிஷ் ஷாப்புகளில் வேலை செய்யும் அநேக பெண்கள் தீ கக்கும் வெடி குண்டுகளால் உண்டாகும் நெருப்பை அணைக்கும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் லண்டனில் உள்ள வெம்பிளி ஸ்டோரின் மாடிமீது பயிற்சி பெறுவதற்காக ஏறுவதைப் படத்தில் காணலாம்.

யுத்த சாமான் கிடங்குகள் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அரசாங்கத்தையே கவிழ்த்துவிட்டு தேசத்தைக் கைப்பற்றிக்கொள்ளவேண்டும் என்ற ஏற்பாட்டுடன் அவர்கள் சில முயற்சிகள் செய்வதாகத் தெரிந்ததும், நேச தேசத்துருப்புகள் இரானில் பிரவேசித்தன. இந்தியாவின் பிரதம தளகர்த்தர், சர் ஆர்ச்சி பால்ட் வேவெல் இரான் படையெடுப்புக்குத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ஜெர்மானியர்கள் இரானை விட்டுப்போய்விடவேண்டும்; இரானியர்கள் ஜெர்மானியர்களை அப்புறப்படுத்தாவிட்டால், பிரிட்டனும், ரஷ்யாவும் ஒன்று சேர்ந்து அவர்களை அப்புறப்படுத்திவிடும்—என்ற கருத்தடங்கிய பல துண்டுப் பிரசுரங்கள், இரானின் தலை நகராகிய டெஹரானின்மேல் ஆகாய விமானத்திலிருந்து போடப்பட்டன.

பிரிட்டனும் ரஷ்யாவும் செய்த ஏற்பாட்டை உலகத்தின் பல பாகங்களில் பத்திரிகைகள் வரவேற்றிருக்கின்றன.

இரான், பெட்ரோல் எண்ணெய்க்குப் பேர்போனது. பெட்ரோல் எண்ணெய்த் தொழிற்சாலை, இரான் அரசாங்கத்துக்கு ஒரு வருஷத்துக்கு 40 லட்சம் பவுன் கப்பமாகக் கட்டிவருகிறது.

பிரிட்டிஷ், ரஷ்யத் துருப்புகள் இரானில் பிரவேசித்ததும், ஒரு அதிசயமான சம்பவம் நடந்தது. இரானிய அரசர் ஷா தம்முடைய மந்திரி சபையை மாற்றியமைத்து, பிரதம மந்திரி ஆலி மன்சூருக்குப் பதில் ஆலி பரூகியைப் பிரதம மந்திரியாக்கி அந்த விஷயத்தை டெஹரா ரேடியோமூலம் வியாழ கிழமை விளம்பரப்படுத்தினர். புதிய பிரதம மந்திரி, இரான் பார்லிமெண்டின் அனுமதியின்மீது தமது துருப்புகள் யாரையும் சுடக்கூடாது என்று கண்டிப்பாக உத்தரவு பிறப்பித்துவிட்டார். மேலும் அவர், இரான் கவர்ன்மெண்டும் மக்களும் எப்போதுமே சமாதானத்தை விரும்புகிறவர்கள் என்றும், எல்லா அன்னிய நாட்டினருடனும், பக்கத்து நாட்டினருடனும் சிநேகிதமாக இருக்க விரும்புகிறவர்கள் என்றும் கூறினர். இந்த சம்பவத்தைக்குறித்த சமாச்சாரம் பிரிட்டனிலும் ரஷ்யாவிலும் உவகையுடன் வரவேற்கப்பட்டது.

# வாரச் செய்திக் குறிப்புகள்.

### ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும் ஆகாய விமானப் போர்.

ரஷ்ய ஆகாய விமானப் படையின் வாழ்த்துச் செய்திகளுக்கு பிரிட்டிஷ் ஆகாயப்படைத் தலைவராகிய சர் சார்லஸ் போர்ட்டல் பதில் கூறுகையில், "நம்முடைய சந்திப்பு பெர்லினின் மேல்" என்று தெரிவித்தார்.

பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை மேற்கு ஜெர்மனியிலும், ஜெர்மன் அதிக்கிரமத்திலுள்ள பிரஞ்சுப் பிரதேசத்திலும் குண்டுகளைப்போட்டுத் தாக்கிற்று. மேற்கு ஜெர்மனியிலுள்ள கைத்தொழில் பட்டணமாகிய மான்ஹீம் பலமாகத் தாக்கப்பட்டது. லா ஹவர் துறைமுகமும், ஆஸ்டண்ட், டன்கர்க் துறைமுகங்களிலுள்ள கப்பற்சாலைகளும். பலமாகத் தாக்கப்பட்டன. இதில் ஒரு பிரிட்டிஷ் விமானம் காணமற்போயிற்று. சென்ற வெள்ளிக்கிழமை இங்கிலீஷ் கால்வாய் பிரதேசத்திலும் வட பிரான்ஸிலும் குண்டுகளைப்போட்டதில், விரோதி ஆகாயவிமான தளத்திலிருந்த விமானங்கள் தாக்கப்பட்டன. எதிரியினுடைய இரண்டு வெடி குண்டு விமானங்கள் நாசமாக்கப்பட்டன. பிரிட்டிஷ் விமானத்திற்குச் சேதமில்லை.

மேற்கு ஜெர்மனியிலுள்ள சில முக்கியவிடங்கள் சென்ற திங்கட்கிழமை மீண்டும் தாக்கப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை இரவு காலநிலை பிரதிகூலமாயிருந்தது, பிரிட்டிஷ் வெடி குண்டு விமானங்களின் வேலைக்குத் தடையாயிருந்தது. ஜெர்மனியிலுள்ள தூசல்தார்ப் நகரத்தின் கைத்தொழிற் சாலைகள் பலமாகத் தாக்கப்பட்டன. இந்த தாக்குதலில் 3 பிரிட்டிஷ் விமானங்கள் காணமற்போயின. திங்கட்கிழமை இரவு மேற்கு ஜெர்மனியிலும் ரைன்லந்திலும் பலவிடங்கள் தாக்கப்பட்டன.

ஜெர்மன் ஆகாய விமானங்கள் சென்ற வாரத்தில் கிழக்கு, வடகிழக்கு, தென் மேற்கு இங்கிலாந்திலும்,

கிழக்கு ஆங்கிலியாவிலும், தெற்கு வேல்ஸிலும், வட கிழக்கு ஸ்காட்லண்டிலும், சில விடங்களில் குண்டுகளைப்போட்டன. உயிர்ச்சேத மொன்றுமில்லை. பொருள் சேதம் சிறிது உண்டாயிற்று.

**ஆப்பிரிக்காவும், மத்தியதரைக் கடலும்.**

வட ஆப்பிரிக்காவிலுள்ள தொப்ருக்கில் பிரிட்டிஷ் உளவறியும் படை மிகவும் சுறுசுறுப்பாக வேலை செய்துகொண்டுவருகிறது விரோதிகள் குண்டுகளைப் போட்டுக்கொண்டிருக்கும்போதே இது வேவு பார்க்கும் வேலையைச் செய்துகொண்டிருந்தது.

வட ஆப்பிரிக்காவில் உள்ள லிபியாவின் துறைமுகப்பட்டணமாகிய திரிபோலியைப் பிரிட்டிஷ் ஆகாய விமானப் படை பலமாகத் தாக்கியது. குண்டுகள் போட்டது 25 டன்களுக்கு மேலிருக்கும். துறைமுகத்திலுள்ள கப்பல்கள், மின்சார இடங்கள் முதலியவைகள் அதிக சேதமடைந்தன. குண்டுகளைப் போட்டுக்கொண்டே ஒரு பிரிட்டிஷ் விமானம் கீழாகப் பறந்துவந்து, தூரதிருஷ்டி விளக்குகள்மேல் (சர்ச் லைட்டுகள்) குண்டுகளைப்போட்டு இரண்டு விளக்குகளை நாசப்படுத்திவிட்டது. திரிபோலியிலிருந்து பெங்காசிக்குப் போகும் கடலோர ரஸ்தாவில் போய்க் கொண்டிருந்த, துருப்பு ஏற்றிச் செல்லும் விரோதி மோட்டாரையும் இன்னும் பல வண்டிகளையும் பிரிட்டிஷ் விமானப்படை நாசப்படுத்தியது.

மத்தியதரைக் கடலிலுள்ள சிசிலி தீவின் துறைமுகமாகிய லெம்புசோவில் 9,000 டன் எடையுள்ள விரோதிக் கப்பல், சென்ற ஆகஸ்ட் 18உயில் தாக்கப்பட்டது. அப்போது கப்பலில் பிடித்த நெருப்பு ஆகஸ்ட்மீ 23உயிலும் விடாமல் எறிந்துகொண்டே இருந்தது.

தென் ஆப்பிரிக்க ஆகாயப் படை, அபிசீனியாவில் இத்தாலியர்கள் ஆதிக்கத்திலிருக்கும் அசோசோ என்ற இடத்தைத் தாக்கியது ஆகாய விமானதளக்கட்டடங்கள் பலமாகத் தாக்கப்பட்டன. இந்த தாக்குதல்களுக்குப் பிறகு நம்முடைய விமானங்கள் பத்திரமாகத் திரும்பி வந்தன.

லிபியாவிலுள்ள பெங்காசி துறைமுகப்பட்டணம், பிரிட்டிஷ் ஆகாயப் படையால் பலமாகத் தாக்கப்பட்டது. ரயில் பாதைகள் நாசமாக்கப்பட்டன. விரோதி விமானங்கள் இறங்கும் தளங்களாகிய காம்பட், மெருஸ்டிர் என்ற இடங்களும் தாக்கப்பட்டன. தென் ஆப்பிரிக்க ஆகாயப் படை, மத்தியதரைக் கடலிலுள்ள நம்முடைய கப்பல்களைப் பாதுகாத்துக் கொண்டிருப்பதுடன் விரோதி விமானங்களுடன் பல தடவை சண்டைகள் போட்டுக்கொண்டிருக்கின்றன.

திரிபோலியிலுள்ள பெட்ரோல் கிடங்குகளும், கப்பற்சாலைகளும், பிரிட்டிஷ் விமானப் படையால் பலமாகத் தாக்கப்பட்டன. 30 இடங்களில் நெருப்புப் பிடித்து எறிந்தது. 135 மைல் தூரம் வரைக்கும் நெருப்புப் பிடித்து எரிவது தெரிந்ததென்றால் அந்த இடத்தில் நெருப்பு எவ்வளவு பரவலாகவும் உயரமாகவும் எரிந்திருக்குமென்று யூகிக்கலாம். இதற்குப் பிறகு பிரிட்டிஷ் விமானங்கள் கீழாகப் பறந்து மெல்லாகா துறைமுகத்தையும், ஆகாய தளத்தையும் தாக்கின அதே இரவில் சொல்லூம், பார்டியா, காம்பட் என்ற இடங்களிலுள்ள விரோதிகளின் பாசறைகள் மேலும் குண்டுகள் போடப்பட்டன.

(லிபியாவில்) சிட்ராகுடாவில் பாதுகாப்புக் கப்பலுடன் இருந்த 800 டன் எடையுள்ள இரண்டு விரோதி கப்பல்கள்மீது குண்டுகள் போட்டதில் ஒரு கப்பலும் அதன் பாதுகாப்புக் கப்பலும் மூழ்கிவிட்டது. மற்றொரு கப்பல் மூழ்கும் நிலைமையில் இருந்தது.

மத்தியதரைக் கடலிலுள்ள பிரிட்டிஷ் கப்பல்களை முழுகடிக்க முயற்சி செய்துகொண்டிருந்த ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களை, பிரிட்டிஷ் விமானங்கள் வழிமறித்துத் துரத்தியடித்தன. ஒரு ஜெர்மன் விமானம் சுட்டு கடலில் வீழ்த்தப்பட்டது.

**அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.**

லண்டன் 'மான்செஸ்டர் கார்டியன்' என்ற பத்திரிகையில் அதனுடைய நிருபர் பின்வருமாறு எழுதுகின்றார்.

"பிரிட்டிஷ் கடற்படைக்குச் சிங்கப்பூர் எப்படி கேந்திர ஸ்தானமாய் இருக்கின்றதோ, அப்படியே அமெரிக்காவிற்குப் பஸிபிக் மகாசமுத்திரத்திலுள்ள ஹவேயன் தீவுகளின் துறைமுகப்பட்டணமாகிய ஹானலூலூவுமிருக்கின்றது. நேசதேச யுத்தகப்பல்களுக்கும், அதைச்சேர்ந்த மற்ற யுத்தகப்பல்களுக்கும், பஸிபிக்மகா சமுத்திரத்தில் "சப்ளை" செய்யக்கூடிய இடங்களும் அவற்றின் தூரங்களும் கீழே குறிப்பிடப்பட்டிருக்கின்றன;—

| | | மைல். |
|---|---|---|
| ஹானலூலூ (ஹவேயன்தீவு). | ஹாங்காங். (சீனா). | 4,860 |
| ஹானலூலூவிலிருந்து (ஹவேயன்தீவு). | மணிலா (பிலிப்பைன் தீவு). | 3,380 |
| ஷ | பனமா (தென் அமெரிக்கா). | 5,280 |
| சிங்கப்பூரிலிருந்து (ஹவேயன்தீவு). | ஹாங்காங் (சீனா). | 1,440 |
| ஷ | ஷாங்கை (சீனா). | 2,260 |
| ஷ | படாவியா (ஜாவா). | 509 |
| ஹாங்காங்கிலிருந்து (ஹவேயன்தீவு). | விளாடி வாஸ்டக் (வட அமெரிக்கா). | 2,415 |
| சிங்கப்பூரிலிருந்து (ஹவேயன்தீவு). | மணிலா (பிலிப்பைன்தீவு). | 1,400 |
| ஷ | சிட்டினி (ஆஸ்திரேலியா). | 4,380 |

அமெரிக்க பஸிபிக்கடற்படை தென் அமெரிக்காவிலுள்ள பனமாவிலிருந்து புறப்பட்டுத் தூரக்கிழக்கு அரங்கத்திலுள்ள பிலிப்பைன் தீவுகளுக்குப் போகவேண்டுமானால் இரண்டு இடங்களில் தங்கி வேண்டிய சப்ளைகள் எடுத்துக்கொண்டு போகவேண்டும்".

மத்திய கிழக்கு அரங்கத்திலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்கு அமெரிக்க விமானங்கள் சப்ளை துரிதப்பட்டு வருகின்றது. இதனால் ஜெர்மனி மேற்கு ஆப்பிரிக்காவில் செனிகாலின் துறைமுகப்பட்டணமாகிய டாக்காரை நோக்கிச் செல்லலாமென்று யூகிக்கப்படுகிறது.

மேற்கு ஆப்பிரிக்காவில், சியரா லியோனிலுள்ள பிரீடௌன் துறைமுகத்தின் மேல் விரோதி வெடிகுண்டு விமானம் பறந்தது. இந்த விமானம் சுடப்பட்டு நியூடன் கிராமத்திற் கருகில் விழுந்து எரிந்து போய்விட்டது. விமானத்திலிருந்தவர்கள் ஒருவரும் தப்பியோட முடியவில்லை. நான்கு பிரேதங்கள் எரிந்த விமானத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டன.

ரஷ்யா பெருவாரியாக யுத்த சாமான்கள் வாங்குவதற்கு அமெரிக்காவிற்கு ஆர்டர் கொடுத்திருக்கின்றது. 15 டன் எடையுள்ள 'டாங்கி'களையும் ஆகாயமூலமாக வேறிடங்களுக்கு எடுத்துச்செல்லக் கூடிய வசதி செய்யவேண்டுமென்று ஒரு ஆர்டரில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது.

அமெரிக்காவிலுள்ள பிரிட்டிஷ் ஸ்தானிகராகிய ஹாலிபாக்ஸ் பிரபு, பிரிட்டிஷ் முதல் மந்திரியையும், மிஸ்டர் ஈடனையும் சந்தித்துப்பேச லண்டனுக்குப்போயிருக்கின்றார். அங்கே 2, 3, வாரங்கள் தங்கியிருப்பார் என்று தெரிகிறது.

**பால்கன்ஸ், துருக்கி, இரான், இராக் முதலியன.**

இரானிலுள்ள ஜெர்மன் பெண்மக்களுக்கும், குழந்தைகளுக்கும் துருக்கி மூலமாக வெளியேறுவதற்கு உடனே வசதிகள் செய்துகொடுக்க வேண்டுமென்று, ஜெர்மனி துருக்கியைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

பிரிட்டிஷ், ரஷ்ய ஸ்தானீகர்கள் துருக்கி அயல்நாட்டு மந்திரியாகிய சாரோஜோக்லுவைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தனர். இரானில் நடக்கும் எல்லா விஷயங்களையும் துருக்கிக்குப் பிரிட்டனும், ரஷ்யாவும் தெரிவித்துக்கொண்டிருந்தபோதிலும் பிரிட்டிஷ், ரஷ்ய துருப்புகள் இரானில் பிரவேசித்தது ஆச்சரியமாயிருந்தது. அந்த துருப்புகள் அவ்வளவு சீக்கிரமாக பிரவேசிக்கும் என்று துருக்கி எதிர்ப் பார்க்கவில்லை. பிரிட்டிஷ் துருப்புகள் இரானில் பிரவேசித்ததைப்பற்றித் துருக்கிக்கு கவலையில்லை. ரஷ்ய துருப்புகள் பிரவேசித்ததை துருக்கி விரும்பவில்லை. ஆனால், இந்த துருப்புகளின் பிரவேசிப்பைப்பற்றித் துருக்கிக்கு முன்னமேயே தெரிவிக்கப்பட்டதால் துருக்கி ஸ்தானிகர்கள் பேட்டி சிநேகப்பான்மையுடனேயே இருந்தது.

இரானில் நேசதேசத் துருப்புகள் முதலில் பிரவேசித்து விட்டபடியால் ஜெர்மனி, இரானில் ஒன்றும் செய்யமுடியவில்லை. ஆகையால், அது துருக்கி 1937-ல் இரானுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் காட்டி சில சலுகைகள் கேட்கக்கூடும். இப்போது, துருப்புகள் பிரவேசித்திருப்பதை இரான் கொஞ்ச

காலமாவது எதிர்க்கவேண்டுமென்று ஜெர்மனி விரும்புகிறது. அப்படிச் செய்துகொண்டிருந்தால், கருங்கடல் மூலமாக ஜெர்மனி, தன்னுடைய திட்டங்களின்பிரகாரம் வேலை செய்யவேண்டிய நேரம் கிடைக்கும் இரானின் எதிர்ப்பு மிகவும் குறைவாகவேயிருந்தது. பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை இரானின் தலைநகரமாகிய டெஹெரானிலும், மற்ற இரானிய பட்டணங்களிலும் துண்டுப் பிரசுரங்களைப் பெருவாரியாகப் போட்டன. இரானிலுள்ள ராணுவ லட்சியங்களின் பிரிட்டிஷ் விமானப்படை குண்டுகள் போடுவது இரானிய எதிர்ப்பைப் பொறுத்ததாயிருக்கின்றது. இரான் என்ன செய்யும் என்பது இனிமேல் தெரியவரும். துருக்கியிலுள்ள ஜெர்மன் ஸ்தானிகராகிய வான் பேபன், துருக்கி அயல்நாட்டு மந்திரியாகிய சாரஜோக்லுவுடன் இரகசியமாகப் புதன் கிழமை சந்தித்துப்பேசினார் என்று தெரிகிறது. கிரேக்கதீவாகிய சாமோஸில் ஜெர்மன் துருப்புகள் அதிகமாக வந்துகொண்டே இருக்கின்றனவென்று மேற்கு துருக்கியிலிருந்துவந்த யாத்ரீகர்கள் தெரிவிக்கின்றனர்.

இரானிலுள்ள பிரிட்டிஷ், இந்திய துருப்புகளின் எண்ணிக்கை வெளியிடப்படவில்லை ஆனால் இந்த துருப்புகள் இந்திய பிரதம தளபதியாகிய சர் ஆர்ச்பால்ட் தலைமையிலிருக்குமென்று தெரிகிறது.

இரான் தேசத்தின் பழைய பெயர், பெர்ஷியா அல்லது பாரசீகம். இது 628,000 மைல் விஸ்தீரணமுள்ளது. இது துருக்கிக்குத் தென்கிழக்கிலும், இந்தியாவிற்கு மேற்கிலும் இருக்கின்றது. இதன் ஜனத்தொகை 1·5 கோடியாகும். ஷா ரிஸா கான் பைலேவி ஆட்சியின் கீழிருக்கின்றது. இது எண்ணெய் உற்பத்தி செய்வதில் உலகத்திலேயே பேர்போன தேசம். சென்ற இருபது வருஷகாலமாக இரான் அபிவிருத்தியடைந்தது பிரிட்டிஷாருடைய உதவியினால்தான்.

பிரிட்டிஷ், இந்திய துருப்புகள் இரானின் மேற்கு, தென் மேற்குப் பாகங்களில் பிரவேசித்திருக்கின்றன. அபாடான் என்ற இடத்தில் 2 பீரங்கிகளும், 3 யுத்த முஸ்தீப்புள்ள பீரங்கி மோட்டார்களும், 350 இரானியர்களும் கைதியாக்கப்பட்டனர். மாரிட், பந்தார் ஷாப்பூர் கைப்பற்றப்பட்டன. பந்தார் ஷாப்பூரிலுள்ள 8 ஜெர்மன், இத்தாலிய கப்பல்களில் 7 பிடிக்கப்பட்டன. பந்தார் ஷாப்பூரில் கைதியாக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் ஜெர்மானியர்களும் இத்தாலியர்களுமாவர். இரானிய கடற்படையைச் சேர்ந்தவர்களும் அநேகர் கைதியாக்கப்பட்டனர். எண்ணெய் கம்பெனிகளில் வேலை செய்பவர்களைப் பாதுகாக்க ஆகாயமூலமாகத் துருப்புகள் ஹப்திகல் பிரதேசத்தில் இறக்கப்படுகின்றன. இரானில் பந்தார் ஷாப்பூர், ஹொராம்ஷார், சுலைமான்யா, காசார் ஷாய்க் இடங்களும் அபாடான் தீவுகளும் பிரிட்டிஷ் கைப்பற்றப்பட்டன.

இரானிலுள்ள ரஷ்ய துருப்புகள் டப்ரீஸ் என்ற இடத்தைக் கைப்பற்றியிருக்கின்றன.

இரானில் இப்போது சண்டை நின்றுவிட்டது, புதிய சர்க்கார் அமைக்கப்பட்டது. இது பிரிட்டனும் ரஷ்யாவுடனும் சிநேகப்பான்மையுடனிருக்கிறது.

### கப்பல் நிலைமை.

பிரிட்டிஷ் கப்பல் மந்திரியாகிய மிஸ்டர். அலெக்சாண்டர் பின்வருமாறு கூறுகிறார் :—" 190 நேசக் கப்பல்களிருக்கின்றன. அவற்றுள் 50 பிரான்சை சேர்ந்தவை. 1,200 உத்தியோகஸ்தர்கள் இந்த கப்பல்களை நடத்துகின்றனர். பிரிட்டிஷ் கடற்படையுடன் 13,000 பேர் இருக்கின்றனர். பிரிட்டிஷ் கடற்படையின் பலம் அதிகரித்திருக்கின்றது. இரவிலும், பகலிலும், கால நிலை எப்படியிருந்தபோதிலும், நேசதேச கப்பல்கள் நம்முடைய கப்பல்களுடன் வேலை செய்துகொண்டுவருகிறது. நேசதேசக் கப்பல்களில் பெரும்பாலும் நாசகாரிகளும், சப்மரீன்கள், சிறு கப்பல்களுமாயிருக்கின்றன. போலந்துக்காரர்கள், பிரிட்டனுக்கு 12 கப்பல்கள் கொண்டுவந்து சேர்த்திருக்கின்றனர். நேசதேசத்தினர் பிரிட்டனுடன் ஒத்துழைக்கும் கப்பல்களின் விவரம் பின்வருமாறு :—

| | | |
|---|---|---|
| டச்சு .. .. | 480 கப்பல்கள் | (2,250,000 டன்கள் எடை.) |
| நார்வே .. | 720 கப்பல்கள் | (3,250,000 டன்கள் எடை.) |
| பிரான்ஸ் .. | 92 கப்பல்கள் | (400,000 டன்கள் எடை.) |
| பெல்ஜியம் .. | 54 கப்பல்கள் | (2,00,000 டன்கள் எடை.) |
| கிரீஸ் .. .. | 240 கப்பல்கள் | (10,000 டன்கள் எடை.) |
| போலண்ட் .. | 32 கப்பல்கள் | (1,00,000 டன்கள் எடை.) |

ஹாலந்திற்கு அருகிலுள்ள ஜெர்மனியைச் சேர்ந்த பிரீஸியன் தீவுகளுக்கருகில் அதிக பந்தோபஸ்துடன் சென்றுகொண்டிருந்த விரோதி கான்வாய் கப்பல்கள் தாக்கப்பட்டன. ஒரு கப்பல் முழுகடிக்கப்பட்டது. மற்ற கப்பல்கள் தீப்பிடித்து எறிந்துகொண்டிருந்தன. விரோதியின் வேவு பார்க்கும் கப்பல்கள் அநேகம் தாக்கப்பட்டன. ஒன்று முழுகடிக்கப்பட்டது ; மற்றொன்று பலத்த சேதமடைந்தது.

### தூரக்கிழக்கு அரங்கம்.

வட இந்தியாவில் பஞ்சாபிலுள்ள பாடியாலா சமஸ்தான மகாராஜா, மலேயாவிலுள்ள இந்திய துருப்புகளைப் பார்வையிட்டுத் திங்கள்கிழமை காலை பஞ்சாபிற்கு வந்து சேர்ந்தார். அவர் கூறியதாவது :— " தூரக்கிழக்கரங்கத்திலுள்ள சிங்கப்பூர், யுத்தத்திற்குத் தயாராயிருக்கின்றது. இந்திய துருப்புகள் உற்சாகத்துடனும், சந்தோஷத்துடனும் இருக்கின்றார்கள். மத்திய கிழக்கு அரங்கத்தில் இந்திய துருப்புகள் வெற்றிபெற்றதுபோல் தூரக்கிழக்கரங்கத்திலும் வெற்றியடையும் என்று உறுதியுடன் நம்புகிறேன்."

ஜப்பான், பொருளாதார விஷயங்களில் தாய்லாந்தைக் கஷ்டப்படுத்துமென்றும், கிரேட் பிரிட்டன், அமெரிக்கா, நெதர்லண்ட்ஸ் கிழக்கிந்திய தீவுகள் ஆகிய இவைகள்மேல் ஜப்பான் இப்போது சண்டைபோட விரும்பவில்லை என்றும், ஜெர்மன் - ரஷ்ய யுத்தத்தின் முடிவை ஜப்பான் எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறதென்றும், ஜப்பானியர்கள் கிழக்கு ரஷ்யாவிலுள்ள சைபீரியாவைத்தான் முதல் முதலில் தாக்குவார்களென்று சீனக்காரர்கள் எதிர்ப்பார்க்கின்றனரென்றும், லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகையின், ஹாங்காங் (சீன தேசம்) விசேஷ நிருபர் எழுதுகின்றார்.

பிரயாணிகள் ஏற்றிச்செல்லும் ஆகாய விமானத்தில் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படையைச் சேர்ந்தவர்கள் பெருவாரியாக, மலேயாவில் வந்து இறங்கியிருக்கின்றார்கள். தென் இந்தியாவிலிருந்து, காலாட்படை, பீரங்கிப்படை முதலிய படைகளைச் சேர்ந்தவர்கள் மலேயாவில் வந்து இறங்கியிருக்கின்றார்கள். இந்த புதிய படையில் சீக்கியர்களும், பாத்தான்களும், டோக்ராக்களும் இருக்கின்றனர்.

சீனாவிலுள்ள செச்சுவான் மாகாணத்தின் தலைநகரமாகிய செங்டு பட்டணத்தை ஜப்பானிய ஆகாய விமானங்கள், சென்ற சனிக்கிழமை தாக்க முயற்சித்தன. அவைகளை சீன சண்டை விமானங்கள் துரத்தியடித்துவிட்டன.

50 ஜப்பானிய விமானங்கள், சீன தேசத்திலுள்ள லோஷான், ஹாக்வான், லியாங்ஷான், சுங்கிங் பட்டணங்கள் மீது குண்டுகளைப்போட்டன.

டச்சு கிழக்கிந்திய தீவுகளிலுள்ள சீனக்காரர்கள் 10 லக்ஷ டாலர்கள் சீன ஆகாய விமானப்படைக்கு நன்கொடையாகக் கொடுத்திருக்கின்றனர்.

தூரக்கிழக்கு அரங்கத்தில் ஜப்பானும், அமெரிக்காவும் ஒன்றாகச் சேர்ந்தே ஆகவேண்டும் என்று, அமெரிக்காவிலுள்ள ஜப்பானிய ஸ்தானிகராகிய அட்மிரல் நொமூரா கூறினார். அவர் அமெரிக்க அரசியல் மந்திரியாகிய கார்டல் ஹல்லைக் கண்டு பேசியபிறகு, பத்திரிகைக்காரர்களுக்கு அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது : " நாங்கள் இராஜீய வாதிகள் போலப் பேசிக்கொண்டிருக்கவில்லை. மனிதத் தன்மையுடனேயே பேசினோம். பெரிய விஷயங்களில் உண்டாயிருக்கும் வித்தியாசங்களில் ஒருவருக்கொருவர் திருப்திகரமான முறையில் வழியைக் கண்டுபிடிக்க பரஸ்பர மனித உணர்ச்சியுடனேயே பேசிக்கொண்டிருந்தோம்."

தாய்லாந்தின் அந்நியநாட்டு மந்திரியாகிய, லுவாங் விச்சித் வாதாகரன் என்பவர், " எங்களுடைய சுயேச்சையைப் பாதிக்காமலிருந்தால், எங்களுடன் நேசப்பான்மையுடன் இருக்கும் நாடுகளைத் திருப்திசெய்ய என்னவேண்டுமானாலும் செய்யத் தயாராயிருக்கிறோம்" என்று ரேடியோவில் கூறினார்.

பிலிப்பைன் தீவிலிருக்கும் மணிலா நகரத்திலிருந்து 400 ஜப்பானியர்கள், ஜெர்மனியர்கள், இத்தாலியர்கள், 'ஜாப்பர்' என்ற பிரஞ்சுக் கப்பலில் வெளியேற அனுமதிக்கப்பட்டனர். இவர்களெல்லோரையும், முக்கியமாக ஜப்பானியர்களை நன்றாகப் பரிசீலனை செய்தபிறகே பிலிப்பைன் அதிகாரிகள், கப்பலில் ஏறும்படி விட்டனர். ஜப்பானியர்களிடமிருந்த 50,000 அமெரிக்க டாலர்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இவர்களுள் அநேக ஜப்பானியர்கள், 20, 30 வருடங்களாக பிலிப்பைன் தீவிலேயே வசித்து வந்தவர்.

**விஷி.**

பாரிஸ் (பிரான்சு) நகரத்தில் பொது உடமைக் கிளர்ச்சி செய்தவர்கள் ஆயிரம் பேர் கைதியாக்கப்பட்டனர். இந்த கிளர்ச்சிக்காரர்களுக்குக் கடுங்காவல் அல்லது மரண தண்டனை விதிக்கப்படும்; ஒரு பிரத்தியேக ஜட்ஜ் இரண்டு நாட்களுக்குள் தனனுடைய தீர்ப்பைத் தெரிவிப்பார்; அந்த தீர்ப்பிற்கு மேல் அப்பீலே கிடையாது; தண்டனை உடனே நிறைவேற்றப்படும்.

பிரஞ்சு மந்திரி சபை சென்ற சனிக்கிழமை மார்ஷல் பீதான் தலைமையில் இரண்டு தடவை கூடியது. அப்போது பொது உடைமை கிளர்ச்சிக்காரர்களை அடக்கும் வழிகளைப்பற்றிக் கவனிக்கப்பட்டது.

பிரான்சின் துரோகியும், பழைய முதல் மந்திரியும் ஜெர்மனிக்கு அனுகூலமானவருமான லவால் என்பவரும், அவருடன் இருந்த மற்ற இரண்டு பேர்களும் பிரான்சில் வெர்சேல்ஸ் என்ற இடத்தில் சுடப்பட்டார்கள். அவர்கள் உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். அவர்களுடைய நிலைமை அதிக கவலைக்கிடமானதாயில்லை. அவர்களைச் சுட்ட மனிதன் கைதியாக்கப்பட்டான். தன்னுடைய பெயர் பால்கோலட் என்றும், மாண்டிவெல் என்ற இடத்தில் 1912-ல் பிறந்தானென்றும் தெரிவித்தான்.

**ஜெர்மன் அதிக்கிரமத்திலுள்ள நாடுகள்.**

ஜெர்மன் அதிக்கிரமத்திலுள்ள பிரஞ்சுப் பிரதேசத்தின் நிலைமை அதிக கஷ்டமானதாயிருக்கின்றது. பொது உடைமை கிளர்ச்சிக்காரர்கள் ஜெர்மனிக்கு விரோதமாக கிளர்ச்சி செய்துவருகிறார்கள். ரயில் முதலிய போக்கு வரவு சாதனங்கள் பாழாக்கப்படுகின்றன.

பிரான்சிலும், பெல்ஜியத்திலும், ஜெர்மனிக்கு விரோதமான கிளர்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. அவற்றை அடக்க ஜெர்மன் ராணுவ உதவி வேண்டியதாயிருக்கிறது. பிரான்சில் வெடி மருந்து சாலைகளில்தான் கலகம் உண்டாயிற்று. அங்குள்ள தொழிலாளர்களுக்கு, பிரஞ்சு அட்மிரல் தார்லான் மீது வெறுப்பும், ஜெர்மனுக்கு ஆயுதங்கள் செய்து கொடுக்கக்கூடாதென்ற பிடிவாதமும் இருந்தது. பெல்ஜியத்தில் போக்குவரத்து சாதனங்களெல்லாம் அழிக்கப்பட்டன.

நார்வேயில், டிராண்ட் ஹெய்ம் என்ற இடத்தில் உள்ள ஜெர்மன் ஆகாய வெடி குண்டு கிடங்குகளுக்குத் தீவைக்கப்பட்டது. ஜெர்மானியர்கள் இரகசியமாக கட்டியிருக்கும் இராணுவ இடங்களெல்லாவற்றிற்கும் தீவைக்கப்பட்டன.

யுகோஸ்லாவியாவில் நாஜிகளுக்கு எதிரிடையாக கிளர்ச்சி செய்த 180 கொரில்லா (குரங்கு) சண்டைக்காரர்கள் சுட்டுவிடப்பட்டனர்.

நார்வீஜியர்கள் நூற்றுக் கணக்கில் நார்வேயை விட்டுத் தப்பி பிரிட்டனுக்கு ஓடுகின்றார்கள்.

**நடுநிலைமை நாடுகள்.**

தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜெண்டைனா தேசத்தின் தலை நகரமாகிய போனஸ் ஐரஸ் துறைமுகத்தில் உள்ள 16 இத்தாலிய கப்பல்களை அர்ஜெண்டைனா சர்க்கார் விலை கொடுத்து வாங்கிக்கொண்டனர்.

**ரஷ்யாவும், ஜெர்மனியும்.**

ராய்ட்டரின் மாஸ்கோ (ரஷ்யபட்டணம்) நிருபர் ரஷ்ய-ஜெர்மன் யுத்தத்தில் ஒரு முக்யமான விஷயம், ரஷ்யாவிற்கு அனுகூலமானவழியில் இருக்கின்றதென்று கூறுகிறார். இதனால் ஜெர்மனியின் முன்னேற்றம் தடைப்படுமென்று தெரிகிறது. அதென்னவென்றால் மழையும், சேறுமேயாகும். சென்ற ஞாயிற்றுக்கிழமை விடாமல் 24 மணி நேரம் பெருமழை பெய்தது. ரோட்டுகளெல்லாம் ஒரே சேறாக இருந்தன. ஆகையால் ஜெர்மன் டாங்கிகள் (இரும்பு கவசத்திற்குள் பீரங்கியுடனிருக்கும் மோடார்கள்) ரோட்டுகளில் போகமுடியாது. யூக்ரெய்ன் பிரதேசத்தில் நிலம் மிருதுவாக இருப்பதாலும், லெனின்கிராடைச்சுற்றி சதுப்பு நிலமாயிருப்பதாலும் ஜெர்மன் டாங்கிகள் முன்னேறிப்போக முடியவில்லை. யூக்ரெய்ன் பிரதேசம் பிடிப்பட்டாலும் ஜெர்மனிக்குப் பிரயோஜனமில்லை. ஏனென்றால் அங்கே மெஷின் மூலமாக உழுது விவசாயவேலை நடக்கிறது அதற்கு ஏராளமான பெட்ரோல் வேண்டியதாயிருக்கும். நாஜிகளின்கீழ் குடியானவர்கள் படும் அவஸ்தை அதிகம்.

மத்தியப் பகுதியில், ரஷ்ய துருப்புகள் தளபதி கோனீவ் தலைமையில் ஜெர்மனியுடன் 48 மணி நேரம் சண்டைபோட்டு ஒன்பது கிராமங்களை மீட்டுக் கொண்டன. சென்ற சிலநாட்களில் 161-வது ஜெர்மன் காலாட்படை, ரஷ்யப்படையால் பலமாகத் தாக்கப்பட்டதில், தளபதி கோனீவின் ஆட்கள் 14 பெரிய பீரங்கிகளையும், 7 சிறிய பீரங்கிகளையும், மூன்று சண்டை டாங்கிகளையும், 6 மோர்ட்டார்கார்களையும், பெருவாரியான யுத்த ஆயுதங்களையும் கைப்பற்றப்பட்டன.

கிழக்குப் பகுதியில் ஜெர்மனி அதிக நஷ்டமடைந்திருக்கின்றது. ஜெர்மனி, 3,000 பேர்களையும், 56 டாங்கிகளையும், யுத்த மோட்டார்கார்களையும் இழந்தது.

டினியப்பர் ஆற்றுச்சண்டையில் மார்ஷல் பூடென்னி ஜெர்மனியைப் பலமாக எதிர்க்கின்றார். டினியப்பர்—பெட்ரோவஸ்க் பகுதியில் ஜெர்மனி முன்னேற முடியவில்லை. டினியப்பர் அணையை விரோதி உடைத்துவிட்டதாக ஒரு ஆதாரமற்ற செய்தி கூறுகிறது.

ரஷ்யாவில், ஸ்காப் பிரதேசத்தில் நெவல் என்ற இடத்திற்கு வடகிழக்கே உள்ளவெலிகியே லூகி என்ற ரயில்வே ஜங்ஷனை கைப்பற்றிவிட்டதாக ஒரு ஜெர்மன் அறிக்கை கூறுகிறது. ஸ்மொலென்ஸ்கிற்கும், இல்மென் ஏரிக்கும் இடையில் பல நாட்களாக சண்டை நடந்ததென்றும், 22-வது ரஷ்யப் படை அதிக கடுமையான யுத்தத்தின் பிறகே வளைக்கப்பட்டு கைப்பற்றப்பட்டதென்றும், 30,000 பேர்களுக்கு மேல் கைதியானார்களென்றும், 400 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டனவென்றும், மொத்தம் இது வரையில் 40,000 ரஷ்யர்களுக்குமேல் கொல்லப்பட்டார்களென்றும் ஒரு ஜெர்மன் அறிக்கை கூறுகிறது. ஒடெஸ்ஸா பட்டணத்திற்கு 125 மைல் கிழக்கேயுள்ள பேரிஸ்லாவ் பட்டணமும் பிடிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. கடுமையான யுத்தத்தின் பிறகே நவகோரட்டைவிட்டு ரஷ்யர்கள் வெளியேறினர்.

சென்ற செவ்வாய்க்கிழமை ரஷ்ய துருப்புகள் எல்லா விடங்களிலும் கடுமையாக ஜெர்மனியுடன் சண்டை போட்டன. ஆகஸ்ட்—24-ல், 63 ஜெர்மன் விமானங்கள் நாசமாயின. ஆகஸ்ட்—25-ல், 93 ஜெர்மன் விமானங்கள் அழிக்கப்பட்டன. ரஷ்யர்கள் இழந்தது 18 விமானங்கள். சென்ற ஞாயறு, திங்கட்கிழமைகளில் ரஷ்யர்கள் லெனின்கிராட் பட்டணத்தைப் பலமாகப் பாதுகாத்தனர். விரோதி ஆகாய தளங்களில் உள்ள 101 பாஸிஸ்ட் ஆகாயப் படை நாசமாக்கப்பட்டது. கருங்கடலில் ரஷ்ய யுத்த கப்பல், ஒரு ஜெர்மன் சப்மரீனை முழுகடித்தது. சென்ற திங்கட்கிழமை நாஜி விமானங்கள் லெனின்கிராடைத் தாக்கியது. அவை ரஷ்ய விமானங்களால் துரத்தியடிக்கப்பட்டன.

ரஷ்ய யுத்தத்தில் தென் பகுதியில் ஜெர்மன் துருப்புகளுக்குத் தளபதி வான்ருன்ஸ்டெட் என்பவர். இவர் பிரஷ்யா தேசக்காரர். இவருடைய வயது 65. ராணுவ விஷயங்களில் சாமர்த்தியமானவர். இவர் ஜெர்மனி ஜயித்த நாடுகளில் பிரவேசித்து அவைகளை ஹிட்லரின் அதிக்ரமத்திற்குள் கொண்டு வருவதில் நிபுணர். இவர் சமீபத்தில் சில ஜெர்மன் உத்தியோகஸ்தர்களால் கொல்லப்பட்டாரென்றும், சில ஜெர்மானியர் இவ்விஷயமாக கைதியாக்கப்பட்டனரென்றும் மாஸ்கோ ரேடியோ கூறுகிறது.

ஜெர்மானியர்கள், ஜெனரல் வான் ருன்ஸ்டெட் கொல்லப்பட்டார் என்ற செய்தியை மறுக்கின்றனர்.

**குறிப்பு.**—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்றாக விடாமல் சேர்த்துவரவும்.
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS : PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.